Registerd as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு


THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (22-4-66) இதழ் 74

பராபவ சித்திரை 9 துல்ஹஜ் பிறை 30 வெள்ளிக்கிழமை

பட்டு உடைகளை சாயம் போடுவதும் றைக்கிளீன் செய்வதும்



சன்ஸெட் டையோர்ஸ் அன் றைக்கிளீனேர்ஸ்

(ராணித்தியேட்டருக்கு அருகாமை)

பெரியகடை யாழ்ப்பாணம்.

போன்: 474. தந்தி: றைக்கிளீன்

## பெண்களுக்கு வாக்குரிமை

அம்மான், ஏப். 21

ஜோர்டான் மன்னர் ஹுசைன் விடுத்துள்ள ஒரு உத்தரவைத் தொடர்ந்து இங்கு பெண்களும் வாக்குரிமை பெறும்வகையில் தேர்தல் சட்டம் திருத்தப்படவிருக்கிறது.

ஜோர்டான் பெண்கள் கல்வி, அரசியல் விஷயங்களில் முன் நிற்பதாக மன்னர் தெரிவித்துள்ளார்.

# ‘தமிழும்சிங்களமும் இரு சமூகத்துக்கும் தேவை

## சமூகஒற்றுமைக்கு இது அவசியம்

### ஒற்றுமை மனப்பான்மையை நேரில் கண்டேன்; எனது நோக்கமும் வெற்றி”

### ‘ஈழநாடு’ மூலம் மகாநாயக பிரியாவிடைச் செய்தி

யாழ்ப்பாணம், வெள்ளி

“இந்நாட்டில் வாழும் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக, இலங்கையர்களாக வாழவிரும்புகிருர்களென்பதை யாழ்ப்பாணத்துக்கு வந்ததன் மூலம் நாங்கள் அறிந்துகொண்டோம். சிங்கள—தமிழ் மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கும் நோக்கத்துடன் நாங்கள் இங்குவந்தோம். எமது நோக்கம் வெற்றிபெற்றுள்ளதென்பதையும் அறிந்துகொண்டோம்.”

இவ்வாறு மல்வத்தை மடாதிபதி அமுனுகம ஸ்ரீராஜகுரு விபாஸிமகாநாயகதேரோ தமது யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்புமுன் ‘ஈழநாடு’ பத்திரிகை மூலம் விடுத்த பிரியாவிடைச் செய்தியில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வசமய சம்மேளனத்தில் பங்குபற்ற மிகவும் மகிழ்ச்சியுடன் வந்தோம். சிங்கள- தமிழ் மக்களுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பது எமது விஜயத்தின் நோக்கமாகும். சென்ற சென்ற இடங்களில் யாழ்ப்பாண மக்கள் எங்களை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்ருர்கள். எங்கள் நாட்டில் வாழும் மக்களிடையே நல்லெண்ணத்தை வளர்ப்பதே இன்றைய பிரதான தேவையாகும்.

வடஇலங்கையில் வாழும் மக்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் சிங்கள மக்களுடன் ஒற்றுமையாகவும் அன்பாகவும் இருக்க விரும்புகிருர்களென்பது எங்களை வரவேற்று நிகழ்த்திய பேச்சுக்கள் மூலம் தெரியவருகிறது.

எங்கள் பகுதியில் வாழும் சிங்களமக்களும் வடபகுதியில் வாழும் மக்களுடன் ஒற்றுமையாக இலங்கையர்களாக வாழவிரும்புகிருர்கள் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சிஅடைகின்றன். இம்மாதிரியாக சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாக வாழமுற்பட்டால் நல்லெண்ணங் கொண்ட இலங்கையர்கள் தோன்றுவார்கள்.

எந்தவிதமான வித்தியாசங்களுமின்றி தங்களால் அளிக்கக்கூடிய மிகச்சிறந்த வரவேற்பளித்தனர். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ, கத்தோலிக்க மதங்களைச்

(5-ம் பக்கம் பார்க்க)

## நயினுதீவில் மகாநாயக தேரோவுக்கு மலர்தூவி வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

“ஏற்கனவே மல்வத்தை பீடாதிபதிகளாக 22 சுவாமிகள் இருந்தபோதிலும் 22வதுபீடாதிபதியாகமுதல் முதலாக யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்நாட்டின் எதிர்காலம் பௌத்த-இந்து -கிறிஸ்தவ-இஸ்லாமிய மக்களின் ஒற்றுமையிலும் ஐக்கியத்திலும்தான் தங்கியிருக்கிறது.”

நயினுதீவுக்கு நேற்றுக் காலை விஜயஞ்செய்த மகாநாயக்கதேரோ தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசும்போது மேற்கண்டவாறு கூறிஞர்.

நயினுதீவு குறிகாட்டுவான் துறையில் நடைபெற்ற இவ்வரவேற்பில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

நாட்டில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டால் எல்லாச் சமயத்தவர்களும் சேர்ந்து பேச்சுவார்த்தைகள் மூலம் சுலபமாகத் தீர்த்துக்கொள்ளலாம் என்றும், இனிமேல் துவேஷ மனப்பான்மையில்லாது ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல ஒற்றுமையாக வாழ வேண்டுமென்றும் மகாநாயக்கதேரோ மேலும் கூறிஞர்.

குறிகாட்டுவான் பாலத்திலிருந்து மாணவ மாணவிகள் மலர்கள் தூவி மகாநாயக்கதேரோவை கோயில் வரை அழைத்துச் சென்றனர். நயினுதீவு மகாவித்தியாலயம், ஸ்ரீ கணேசவித்தியாசாலை, ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலை ஆகியவற்றின் மாணவ மாணவிகள் வழிகளில் நின்று வரவேற்றனர்.

நயினுதீவு கிராமசபைத் தலைவர் திரு. எஸ். கே. தம்பையா மகாநாயக்க தேரோவை வரவேற்றுப் பேசுகையில் ஆத்மபலமே ஒருநாட்டின் உண்மையான பலமென்றும் கூறிஞர்.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் பேசுகையில், கடந்த காலத்திலிருந்த கருத்துவேற்றுமைகள் நீங்கி, நாட்டில் ஒற்றுமை நிலவுகிறதென்றும், அதேவேளையில் நல்லெண்ணத் தூதுவராக இங்கு தாங்கள் விஜயம் செய்ததையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும் கூறிஞர்.

நாகபூஷணி கோவில்தர்மகர்த்தா திரு. வி. பொன்னம்பலம், மகாநாயக்க தேரோவை கோவிலில்வரவேற்ருர். நண்பகல் அங்கிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய மகாநாயக்க தேரோ நேற்று மாலை 4 மணிக்கு விமானத்தில் கொழும்பு பயணமாஞர்.

(ந. நி.)

## இராணுவ அதிகாரிக்கு மரண தண்டனை

ஜாகர்த்தா, ஏப். 21

கடந்த செப்டம்பர் மாத புரட்சியில் ஈடுபட்ட குற்றத்துக்காக இந்தோனேஷியவிசேஷ நீதிமன்றம் ஒரு இராணுவஅதிகாரிக்கு மரண தண்டனை விதித்துள்ளது.

## சதிமுயற்சி கைதிகள் இருக்கும் சிறைச்சாலை

### டாக்டர் பெரேரா போய்ப்பார்த்தார்

கொழும்பு, வெள்ளி

ஹல்ஸ்டோர்ப் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டுள்ள பெப்ரவரி சதிமுயற்சி சந்தேகநபர்களை சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என்.எம். பெரேரா இன்று காலை போய்ப்பார்த்தார்.

கைதிகள் எந்தநிலைமையில் வைக்கப்பட்டிருக்கிருர்கள் என்பதை அறிந்துகொள்வதற்காகவே அவர் அங்கு சென்றதாகக் கூறப்பட்டது. டாக்டர் பெரேரா கைதிகளின் நிலைமையைப் பார்வையிட்டபின் ‘‘அவர்கள் நியாயமானவசதியுடன் இருக்கிருர்கள்’’ என்று சொன்ஞர். டாக்டர் பெரேரா சிறைச்சாலையில் சுமார் ஒருமணி நேரம் செலவிட்டார். சதிமுயற்சி சம்பந்தமான கைதிகளை நேரில் போய்ப் பார்க்க

(6-ம் பக்கம் பார்க்க)

## ‘நாட்டின் குறைகளும் தெரியும் தீர்க்கவும் முடியும்’

### தோட்டத் துரைமார் கூட்டத்தில் ஜே. ஆர்.

கொழும்பு, வெள்ளி

‘நாட்டிலுள்ள குறைகள் என்ன என்பது எங்களுக்கு தெரியும். அவைகளைஎப்படி நிவர்த்தி செய்வதும் என்பதும் எங்களுக்குத் தெரியும்’ என்று ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஐயவர்த்ஞ இன்று கூறிஞர்,

வர்த்தகசபை மண்டபத்தில் நடைபெற்றதோட்டத் துரைமார் சங்கத்தின் வருடாந்த மகாநாட்டில் ராஜாங்க மந்திரி உரைநிகழ்த்திஞர்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

நமது வாழ்க்கையில் எதையாவது சாதித்திருக்கிரேம் என்ருல், அது மக்களின் மேன்மையைக் கருத்தில் கொண்ட மக்களின் அரசாங்கத்தை நிறுவியிருப்பதாகும். நாம் கடந்த ஆண்டு பதவி ஏற்றபோது முதலில் எம்மை எதிர்நோக்கிய பிரச்னே நாட்டில் நிலவிய ஐத்கியமின்மையாகும் கடந்த பத்து ஆண்டுக

(6-ம் பக்கம் பார்க்க)

கொழும்பு ஸ்ருடியோ

கே. கே. எஸ். ரேட் — சுன்ஞகம்

திறப்பு விழா

அன்புடையீர்!

மேற்படி எனது இளை ஸ்தாபனத்தை நிகழும் பராபவ ஞு சித்திரை மீ 10-ம் திகதி (23-4-66) சனிக்கிழமை பிற்பகல் 12-15-க்கு மேல்வரும் சுப வேளையில்,

வலி-வடக்கு மாவட்ட அதிபர்

திரு தி. முருகேசம்பிள்ளை

அவர்களால் திறந்து வைக்கப்படும். தாங்களும் இக் கொண்டாட்டத்தில் கலந்து எம்மை ஊக்குவிக்கும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றேன்,

இங்ஙனம்

அ குகதாசன்

(உரிமையாளர்)

கொழும்பு ஸ்ருடியோ,

சுன்ஞகம்.

148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

வெற்றியைவிட தோல்வியே மேலான ஆசிரியர். அறிவால் திகைப்பு ஏறபடும்போது அன்பு நம்பிக்கையளிக்கிறது. உலகின் நோய்களுக்கெல்லாம் அன்பே மகத்தான சஞ்சீவி. அன்பே வாழ்க்கையின் தர்மம். அன்பு தீங்கு எண்ணுது. தீமையைக் காணுது, நல்லனவற்றையே காணும்.

—சுவாமி சிவானந்தா.


# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELANADU Jaffna: Phone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு சித்திரை மீ௳ 9 (22-4-66)


## வெளிநாட்டு உதவிமட்டும் போதுமா?

வெளிநாடு சென்றிருந்த நமது பிரதமர் திரு. டட்லிசேனநாயக்கா நாடு திரும்பியிருக்கிறார். தேசிய ஐக்கியம் பற்றி வெளிநாடுகளில் அவர் பெருமிதப்பட்டுக்கொண்டதுபோல், பல்லாண்டுகளுக்குப்பின்னர், தமிழ்த் தலைவர்களும் வெளிநாடு சென்று திரும்பிய பிரதமரை விமானநிலையத்தில் மனமகிழ்ச்சியோடு வரவேற்றிருக்கின்றனர். வைத்திய பரிசோதனைகளின் பின் உடல் நலத்துடனும் உற்சாகத்துடனும் பிரதமர் திரும்பியிருக்கிறார் எனினும், நாட்டில் பெரும்வேலைகள் அவரை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றன வேலைகள் பல இருப்பினும் அவருக்குப் போதிய ஓய்வும் அளித்து அவரது உடல்நலனைப் பேணவேண்டியது இதரமந்திரிகளினதும் கடமையாகும்.

வைத்திய பரிசோதனைகளுக்காக வெளிநாடு சென்றபோதிலும், நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பொருளாதார வ்ருத்திக்கும் வெளிநாடுகளிடமிருந்து உதவியும் பெற்றுக்கொண்டு திரும்பியிருக்கிறார் பிரதமர். இலங்கையில், சிதைந்துபோயிருந்த தேசிய ஒற்றுமையைமீண்டும் ஏற்படுத்தி ஸ்திரமான அரசாங்கத்தைஉருவாக்கி. ஜனநாயகம் இங்கு நிலைபெறும் என்ற நிலையைத் தோற்றுவித்த பிரதமரின் அரசியல் ஞானத்தை வெளிநாட்டார் உணர்ந்துகொண்டதன் பின்னரே உதவியளிக்கமுன்வந்துள்ளனர். பிரதமரின் நேர்மைக்கும் திறமைக்கும் இது நல்ல சான்று.

ஆனல் வெளிநாட்டாரின் உதவியுடன் நாம் வாழ்ந்துவிடமுடியாது. வெளி உதவிகளையே நாம் நம்பியிருக்கவும் முடியாது. நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு அபிவிருத்தித்திட்டங்களைத் திட்டமிட்டு அமுல்நடத்தவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கவும், வாழ்க்கைச்செலவைக் குறைக்கவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம். இதற்கு முதலாவதாக நிர்வாக சேவையில் சீர்திருத்தம் செய்து நிர்வாக வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெறுவதற்குத் தடையாக இருக்கும் ''சிவப்பு-நாடா'' முறையை நீக்கவேண்டும் அந்நியராட்சிகாலத்திலிருந்ததைவிட மிக மோசமாக இன்று நிர்வாக வேலைகளிலுள்ள வீண் தாமதங்களை அகற்ற வேண்டும். இரண்டாவதாக அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்த வேண்டும். இத்துடன் உள்நாட்டு உற்பத்திப் பொருள்களின் தரத்தையும் விலையையும் மதிப்பிடவேண்டியதும் அவசியம். மூன்ருவதாக தேசிய ஐக்கியமும் ஒருமைப்பாடும் அவசியம். தேசிய ஒற்றுமை இன்று தோன்றி வளர்ந்து வருவதற்கான நல்ல அறிகுறிகள் தென்படுகின்றன.

எனினும் நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்கவும் இன்று மிக மிக அத்தியாவசியமாகத் தேவைப் படுபவது கடும் உழைப்பேயாகும். அமைச்சர்களானுலும் அரசாங்க அதிகாரிகளானுலும் சமய, சமூகத் தலைவர்களானுலும் சரி பேச்சைக் குறைத்து செயலை அதிகரிக்க வேண்டும். ஒற்றுமையும் உழைப்பும் தேவையெனப் பேசுவதால் பயனில்லை. இதைச் செயலில் காட்ட வேண்டும்.

## தாஷ்கண்ட் பிரகடனத்துக்கு ஆபத்து

இந்திய - பாகிஸ்தான் தகராறுகள் சுமுகமாகத் தீர்ந்து இந்திய உபகண்டத்தில் அமைதியும் அதைத் தொடர்ந்து சுபிட்சமும் ஏற்பட 'தாஷ்கண்ட்' பிரகடனம் வழிவகுத்து விட்டதாக மகிழ்ச்சியடைந்த அனைவரும் இன்று பாகிஸ்தான் தலைவர்களும் இந்தியத் தலைவர்களும் தெரிவிக்கும் கருத்துக்களைப் பார்த்துக் கவலை கொள்ளாமலிருக்க முடியாது. யார்சரி யார் தவறு என்று இப்பொழுது ஆராய்வதை விடுத்து நிலைமை மோசமடையாமல் தடுக்க வேண்டியது உலகசமாதானத்தை உண்மையில் விரும்பும் அனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும்.

இந்திய பாகிஸ்தான் தலைவர்கள், தங்கள் தங்கள் நாடுகளுக்கிடையேயுள்ள தகராறுகளுக்கு நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முன்வந்ததும் அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு சோவியத் யூனியன் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்ததும் சம்பந்தப்பட்ட இரு நாடுகள் மட்டுமல்ல உலக சமாதானத்தை விரும்பும் அனைவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஆனல் இந்த முயற்சிக்கு வழி அமைத்துக் கொடுத்தவர்கள் மீதுள்ள வெறுப்போ வேறு காரணமோ தாஷ்கண்ட் பேச்சுக்கு முட்டுக்கட்டை போடவும் ஒரு சிலர் முயன்றனர். அந்த முயற்சி வெற்றியளிக்காது விட்டபோதிலும் தாஷ்கண்ட் பிரகடனம் அமுல் நடக்காது தடுக்கும் முயற்சியில் அவர்கள் வெற்றி பெற்று விடுவதாக, இப்பொழுது தோன்றியுள்ள நிலையிலிருந்து தெரிகிறது.

வேறுபல நாடுகளில் நிகழ்ந்துள்ள சம்பவங்களை ஒரு படிப்பினையாகக் கொண்டு இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள தாஷ்கண்ட் பிரகடனத்தைச் செயல்படுத்த வேண்டும். இதுவே அரசியல் விவேகம். தாஷ்கண்ட் பிரகடனம் பூரண வெற்றி பெற சோவியத் யூனியனும் இதர நாடுகளும் முயற்சி செய்வது சமாதானத்துக்கு தொண்டு செய்வதாகும்.

## வவனிக்குள திட்ட சிறுபோக பயிர்ச் செய்கை

### நீர்ப்பாசனம் பற்றி செய்யப்பட் முடிவுகள்

துணுக்காய், வியாழன் வவனிக்குள குடியேற்றத் திட்டத்தில் உள்ள நெற்காணிகளில் சிறுபோக வேளாண்மை செய்வதற்கான நீர்ப்பாசனக் கூட்டம் யாழ்ப்பாண உதவி அரசாங்கஅதிபர்திரு. எம் சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணுக்காய்ப் பிரிவு காரியாதிகாரி திரு. மா. இராசரத்தினம், கமத்தொழில் உதவி ஆணையாளர், மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர், வவனிக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளர், தொழில் நுட்ப உத்தியோகஸ்தர், குடியேற்றப்பகுதி உத்தியோகஸ்தர்கள், கிராமசேவையாளர்கள் உட்படப்பலகுடியேற்றவாசிகளும் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

(அ) வலதுகரைக் குடியேற்றத்திட்டத்தில் உள்ள 668 குடியேற்றவாசிகளுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு ஏக்கர்வீதம் சிறுபோகப் பயிர்ச்செய்கைக்கு 1 முதல் 226 வரை இலக்கம்கொண்ட வயற்காணிகளைப் பாவிக்க வழங்குவது. (ஒரு காணி 3 ஏக்கர் விஸ்தீரணம்)

(ஆ) மத்திய பிரிவிலுள்ளவர்களுக்கு ஒன்றரை ஏக்கர் வீதம் கொடுப்பது. இவர்கள் தங்கள் தங்கள் காணிகளிலேயே விதைக்கும்படி கோருவது.

(இ) இடதுகரையிலுள்ள 220 குடியேற்றவாசிகளுக்கு இரண்டு ஏக்கர் வீதம் தங்கள் தங்கள் காணிகளில் விதைக்கும்படி கோருவது.

(ஈ) வலது வரையில் சிறுபோகம் செய்யாது மீதியாக உள்ள வாய்க்கால்களை காலபோகப் பயிர்ச்செய்கைக்கு முன் திருத்துவது.

10-5-66 முதல் தண்ணீர் திறப்பது என்றும் 10-6-66 க்குமுன் விதைப்புமுடிவடைதல் வேண்டுமெனவும், 10-9-66-ல் கடைசித் தண்ணீர் கொடுப்பது எனவும், 5-5-66 க்குமுன் வேலி, பீலி முதலியனதிருத்துதல்வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது-

## 'தானங்களில்சிறந்தது சிரமதானம்'

மீசாலை, வியா.

''சிரமதானமே எல்லாத் தானங்களிலும் சிறந்தது. ஏழைகளும் செல்வர்களும் செய்யக்கூடியது ஆகவே அரசியல் வேறுபாட்டை விட்டு ஏகோபித்து யாவரும் இவ்விடத்துத்தெருவை சிரமதான முறையில் பூர்த்தி பண்ணவேண்டும்'' இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் சாவகச்சேரி வடக்கு கண்ணகை அம்மன் கோயிலில் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. ஆர். சிவகுரு தலைமையில் நடந்த சிரமதான இயக்க ஆரம்பக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு. ஆர். டி. சிவகுரு, திரு. ஆர். டி. சுப்பிரமணியம், தென்மராட்சி காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளை, திரு. க. சங்கரப்பிள்ளை, திரு. இ. சதாசிவம், திரு. மு. விஞசித்தம்பி உட்படப் பலர் பேசினர்.

கோவில் சந்நிதானத்தில் கூடிய கூட்டத்தில் பின்வரும் நிர்வாகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டன.

காவலர்கள்: திருவாளர்கள் வ. ந. நவரத்தினம் எம். பி., ஆர். டி. சிவகுரு, இ.சிதம்பரப்பிள்ளை. தலைவர் திரு. மு. விஞசித்தம்பி. உபதலைவர்கள்: திருவாளர்கள் இ. வேலுப்பிள்ளை, வ. சிவசம்பு. இணைக்காரியதரிசிகள்: திருவாளர்கள் க. சங்கரப்பிள்ளை, ஆர். ரி. சுப்பிரமணியம். பொருளாளர்: திரு. இ. சதாசிவம் எட்டுப்பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி நாயன்மார்கட்டுஸ்ரீஇராசராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் இன்றுமாலை 8 மணிக்கு திரு. த. சுப்பிரமணியம் ''திருஞானசம்பந்தர்'' என்னும் பொருள் பற்றியும், நல்லூர் கிழக்கு மூத்தவிநாயகர் ஆலயத்தில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் ''ஆனாயநாயனர்'' என்னும் பொருள்பற்றியும், கடையிற்சுவாமி தேவஸ்தானத்தில் இரவு 7 மணிக்கு திரு. க.முருகேசு ''நால்வர்'' என்னும் பொருள்பற்றியும் சமயப்பிரசங்கங்கள் நிகழ்த்துவர். இச்சமயப்பிரசங்கங்கள் அகிலஇலங்கைப்பொது ஜன சேவைச்சங்கஆதரவில் நடைபெறும்.

## கந்தபுராணப் படிப்பு

அச்சுவேலி, வியாழன் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த அச்சுவேலி உலவிற்குளப் பிள்ளையார் கோவிலில் கந்தபுராணப் படிப்பு படிக்கப்பட்டு வருகின்றது. சுவாமி கல்யாணப் படிப்பன்று விசேஷ அபிஷேக ஆராதனையும் இடம் பெற்றது.

## நாட்டிலும் நகரிலும்

உலகத்திலே பலவிதமான பைத்தியங்கள் உண்டு. சங்கீதப்பைத்தியம், கதைப் பைத்தியம், திருவிழாப் பைத்தியம், சவாரிப்பைத்தியம், கிரிக்கெட்பைத்தியம் —இப்படிப் பல தினுசுகள். இவை எல்லாவற்றுள்ளும் எனது ஆழ்ந்தஅனுதாபத்துக்குரிய பைத்தியம் சினிமாப் பைத்தியம் தான். மணிக்கணக்காகக் கொதிக்கும் வெய்யிலில் கால்கடுக்க நின்று, சாப்பாட்டையும் நித்திரையையும் மறந்து சினிமா பார்க்கும் ஜன்மங்களை நினைக்கும் தோறும் 'ஏன் பிறந்தாய் மகனே' என்று முகாரியில் பாடத் தோன்றுகிறது. ஒரே படத்தைப் பத்துமுறை பார்ப்பது, ஒரே நாளில் நாலு படங்கள் பார்ப்பது, தான் பார்த்த படங்கள் எல்லாவற்றின் பெயர்களையும் பத்திரமாகக் கொப்பியில் எழுதிவைப்பது —இப்படி சினிமாப் பைத்தியத்திலும் பல்வேறு கோளாறுகள் இருக்கின்றன.

இது எல்லாவற்றையும் தூக்கி அடிக்கும் பைத்தியம் ஒன்று வேல்ஸ் தேசத்திலே இருக்கிறது. அங்கே 47 வயதான ஒரு விதவை —திருமதி பிராங்லின்—ஒரு படத்தைப் போன செவ்வாய்க்கிழமை 500 தடவையாகப் பார்த்து முடித்திருக்கிறார். 'சங்கீதத்தின் ஓசை' என்ற பெயருள்ள ஓர் ஆங்கிலப்படத்தை இம்மாது சிரோமணி ஒவ்வொரு நாளும் தவருது தமது கிராமத்திலுள்ள சினிமாக் கொட்டகையில் இரண்டு நேரமும் பார்த்துவந்தாளாம். 55வது முறையாக அவள் அந்தப் படத்தைப் பார்க்கப் போனபோது கொட்டகை முதலாளி அவளுக்கு ஒரு இலவச 'பாஸ்'ஸை அளித்தார். மத்தியானச் சாப்பாட்டை கொட்டகையிலுள்ள சிற்றுண்டிச்சாலையிலேயே அருந்திவிட்டு முதலாவது காட்சியைப் பார்த்துவிட்டு, பின்னர் தேநீர் குடித்துவிட்டு இரண்டாவது 'ஷோ' மணி அடிக்கும்போது 'டாண்' என்று தமது ஆசனத்தில் வந்து குந்திவிடுவாளாம் அந்தச் சினிமா மோகி(னி). அந்தப் படத்தின் வசனங்கள் அவளுக்குத் தண்ணீர்ப்பாடம். அதை ஆயிரம்தடவை பார்க்கவேண்டுமென்பது அந்தப் புண்ணியவதியின் ஆசையாம்!

இப்படியும் ஒரு சினிமாப் பைத்தியம் இருக்குமா சொல்லுங்கள்

இன்று சினிமாவுக்குப் போகும் கூட்டத்துக்கு 30 வருடங்களுக்கு முன்பு வெளியான 'சிந்தாமணி' படத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இதுகள் எல்லாம் சிவாஜி—எம்.ஜி.ஆர். யுகத்துச் சரக்குகள். 'சிந்தாமணி' படம் சென்னையிலும், கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் வருடக்கணக்காக ஓடியது. அதைப் பார்த்த பலருக்கு உண்மையிலேயே சித்தப்பிரமை ஏற்பட்டுவிட்டது. அஸ்வத்தம்மாவை நேரில் பார்க்கவேண்டுமென்றுவீட்டிலே சொல்லிக்கொள்ளாமல் யாத்திரை புறப்பட்டவர்களை உறவினர்கள் தலைமன்னாரிலும், மண்டபத்திலும் தடுத்து நிறுத்தித் திருப்பி அழைத்துவந்த சம்பவங்கள் அப்பொழுது நிகழ்ந்தன. தியாகராஜ பாகவதரும் அஸ்வத்தம்மாவும் பாடிய 'மாயப் பிரபஞ்சத்தில்' என்ற பாட்டைத்தான் அக்காலத்துத் தாய்மார்கள் ஏணையில் குழந்தையை வைத்துத் தாலாட்டும்போது பாடினார்களாம்!

4-ம் கலம் பார்க்க

5-ம் கலத் தொடர்ச்சி

பாகவதரின் 'அசோக்குமார்' இரண்டாவது முறையாக யாழ்ப்பாணத்தில் காட்டப்பட்டபோது ஜனக்கூட்டம் தாங்க முடியாமல் (அப்பொழுதெல்லாம் கியூ வழக்கம் இல்லை) ஒரு கொட்டகை முதலாளி துப்பாக்கியால் சுடவேண்டியும் வந்தது. ஒரு அடி உயரமும் அரைஅடி அகலமுமுள்ள துவாரத்துக்குள் இரண்டாயிரம் கைகள் ஏககாலத்தில் நுழைய வேண்டுமென்றுல் எப்படியிருக்கும்? சினிமாவுக்குப் போகிறவர்கள் கைகால் முறிபட்டு, சட்டைகள் சால்வைகளைப் பறிகொடுத்துவிட்டு வீடு திரும்புவது சர்வசாதாரணமான சம்பவம்.

இக்காலத்தில் சோபியா லோறன் என்ற ஆங்கில நடிகை கார்லோ பொன்ரி என்ற இத்தாலிய டைரக்டரை கலியாணம் செய்து கொண்ட புதினத்தை பத்திரிகைகளில் விழுந்து விழுந்து வாசிக்கும் சினிமாவாண்டுகளுக்கு மேலே கூறப்பட்ட சினிமாப் பைத்தியங்களைப்பற்றி எதுவுமே தெரியாது.

நமது காரியாலயத்தில் வேலைபார்க்கும் 'ஸடார்' தோழர் ஒருவர் 'தியாகராஜ பாகவதர் சொந்தக் குரலிலேயா பாடினர்?' என்று என்னைக் கேட்டதைப் பார்க்க வேண்டுமே!

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌஹாட்டிக் கருகே

# ரயில் விபத்தில் 43 பேர்பலி; 127 பேர்காயம்;

# பலரதுநிலைமைகவலைக்கிடம்

## வெடிவிபத்து காரணமாம்

கௌஹாட்டி, ஏப்ரல் 20

வடகிழக்கு எல்லை ரயில்வேயைச் சேர்ந்த பிரயாணிகள் ரயிலுக்கு ஏற்பட்ட வெடிவிபத்தில் 43 பேர் கொல்லப்பட்டனர். 127 பேர் காயமடைந்தனர். இந்தக் கோரச் சம்பவம் இந்தியாவைச் சேர்ந்த அஸாம் ராஜ்யத்தில் கௌஹாட்டிக்கு அருகே, லுங்டிங் ரயில் நிலையத்தில் நேற்றிரவு பத்து மணிக்கு ஏற்பட்டது.

லுங்டிங் ரயில் நிலையத்தில் இந்தப் பிராயாணிகள் ரயில் நின்று கொண்டிருந்த பொழுது இச்சம்பவம் நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயிலின் ஒரு பெட்டிக்குக் கீழே இவ்வெடிவிபத்து ஏற்பட்டதென்றும் அந்தப் பெட்டியும் மற்றும் சில பெட்டிகளும் பலத்த சேதத்துக்குள்ளானதாகவும் முதலில் கிடைக்கப்பெற்ற செய்திகள் கூறுகின்றன. விபத்து நிகழ்ந்த ரயில் நிலையத்துக்கு வெளியார் யாரும் வராதபடி தடை நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் அதிகமானவர்கள் ஆபத்தான நிலையில் இருப்பதாக கடைசியாகக் கிடைக்கப்பெற்ற செய்திகள் கூறுகின்றன. 127 பேரும் லும்டிங் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

---

இந்திய-பாக.

## சமரசம் ஏற்பட்டால் சீனாவை பாக். நாடாது

### மக்னமாரா கருத்து

வாஷிங்டன், ஏப். 21

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நிலவும் தகராறுகள் தீர்க்கப்பட்டு சமரசம் ஏற்பட்டுவிட்டால் கம்யூனிஸ்ட் சீனாவின் உதவிகளை பாகிஸ்தான் நாட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது என்று அமெரிக்க பாதுகாப்பு மந்திரி மக்னமாரா தெரிவித்துள்ளார்.

சீன-பாகிஸ்தான் நேச ஒற்றுமைக்கு பாகிஸ்தானே அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. பாகிஸ்தான்கொடுக்கும் மதிப்புக் காரணமாகவே இந்த உறவுமுறை பெரிதாகத் தோன்றுகிறது என்றும் மக்னமாரா குறிப்பிட்டார்.

பாகிஸ்தான்-சீன நட்புக் குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், காஷ்மீர் பிரச்னை தீர்ந்தால் கூட சீனாவை பாகிஸ்தான் விட்டுவைக்காது போல் தெரிகிறது என்றும் தெரிவித்தார்.

---

நேட்டோவிலிருந்து விலகுவது:

## டிகோல் தீர்மானத்தை தேசியசபை அங்கீகரித்தது

பாரிஸ், ஏப், 21

வட அத்திலாந்திக் ஒப்பந்த ஸ்தாபனத்திலிருந்து பிரான்ஸ் விலகிக்கொள்ள வேண்டுமென்று அதிபர் டி'கோல் கொண்டுவந்த தீர்மானத்தை பிரெஞ்சு தேசிய சட்டசபை அங்கீகரித்துள்ளது.

'நேட்டோ' விலிருந்து பிரான்ஸ் விலகிக்கொள்வதை எதிர்க்கட்சியினர் வன்மையாக எதிர்த்தபொழுதிலும் அவர்களது பிரேரணையை தேசிய சட்டசபை நிராகரித்துவிட்டது.

நேட்டோவிலிருந்து பிரான்ஸ் விலகுவதை பிரெஞ்சு பிரதமர் பொம்பிடோ ஆதரித்துப் பேசுகையில் அமெரிக்காவின் தற்போதைய இராணுவத் தந்திரங்களின் மூலம் போர் ஒன்று மூளுமானால் ஐரோப்பாவை அது அழித்துவிடும் என்று கூறினார்.

பிரரன்ஸின் கருத்தையே பல நேட்டோ அங்கநாடுகளும் கொண்டிருந்தாலும் பகிரங்கமாக அதனைத் தெரிவிக்க அவைகள் தயங்குகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

அமெரிக்க செனட்டரின்

## வியட்னும் யோசனை: சீனா நிராகரிப்பு

பீக்கிங், ஏப்ரல் 21

அமெரிக்க செனட்டர் மான்ஸ்பீல்ட் வெளியிட்டிருந்த வியட்னும் சமாதான யோசனையை, கம்யூனிஸ்ட் சீனா நிராகரித்துவிட்டது.

வியட்னும் சம்பந்தமாக ஒய்யானிலோ அல்லது பர்மாவிலோ பேச்சுக்கள் நடத்தலாமென்று செனட்டர் மான்ஸ்பீல்ட் தெரிவித்திருந்த யோசனையை அமெரிக்க அதிபர் ஜோன்ஸனும் வரவேற்றிருந்தார்,

இப்படியானதொரு பேச்சுக்களில் அமெரிக்கா, தென் வியட்னும், வடவியட்னும், சீனா கலந்துகொள்ளலாமென்றும் ஜோன்ஸன் கூறியிருந்தார்.

இது சம்பந்தமாக சீன செய்தி ஸ்தாபனம் நேற்று வெளியிட்ட செய்தியொன்றில், 'அமெரிக்காவின் இந்த யோசனை யுத்தத்தையே விரிவு படுத்தும்" என்று தெரிவித்துள்ளது.

---

## சாஸ்திரிக்கு 'பாரத ரத்னா'

### தந்தையின்பரிசை மைந்தன் ஏற்றார்

புதுடில்லி, ஏப்ரல் 21

இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன்நேற்று இங்கு நடைபெற்ற விசேஷ வைபவமொன்றில் பலருக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்தார்.

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரிக்கு இந்திய ராஷ்டிரபதி வழங்கிய "பாரத ரத்னா" உயர் விருதை சாஸ்திரியின் மூத்த புதல்வன் ஹரிகிருஷ்ண பெற்றுக் கொண்டார்.

### விவசாயிக்குப் பரிசு

ஜம்முகாஷ்மீரைச்சேர்ந்த ஒரு விவசாயிக்கும் ராஷ்டிரபதி பரி[illegible] பாகிஸ்தான் ஊடுருவல்காரர் குறித்து இவர்தான் அரசாங்கத்துக்கு முதலில் தகவல் கொடுத்திருந்தார்.

நடிகர் சிவாஜி கணேசன் பத்மஸ்ரீ விருது பெற்றுக் [illegible]

---

## திருமணம்

### சோபியா ஒப்புக்கொண்டார்

லண்டன், ஏப். 31

தாம் இரகசியமாக கார்லோ பொண்டியை (திரைப்படத் தயாரிப்பாளர்) திருமணம் செய்துகொண்டதாக பிரபல இத்தாலிய நடிகை சோபியாலோறன் தெரிவித்துள்ளார்.

தமது திருமணம் அமைதியாக நடைபெறவேண்டும் என்பதற்காகத்தான் தாம் திருமணத்தை இரகசியமாக பாரிஸிலுள்ள ஒதுக்கான இடத்தில் நடத்தியதாக சோபியா எடுத்துக் கூறியுள்ளார்.

சோபியாலோறனுக்குஇப்போது வயது 31. கார்லோ பொண்டிக்கு வயது 53.

இத்திருமணம்பற்றி முன்னர் சோபியாலோறனின் தாயிடம் நிருபர்கள் கேட்டபோது தமக்கு ஒன்றும்தெரியாது எனத் தெரிவித்திருந்தார்,

---

## ஈயக்குட்டையில் சிவலிங்கம்!

கோலாலம்பூர், ஏப் 21

பத்து ஆராங்கில் ஈயக்குட்டையொன்றில் தினசரி தோற்றமளிப்பதாகக் கூறப்படும் சிவலிங்கத்தின் திருவுருவம் ஆயிரக்கணக்கான மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்திவருவதாகத் தெரிகிறது.

அந்த உருவம் ஐந்து விநாடிகள் மட்டுமே தோன்றிப் பின்னர் மறைந்துவிடுவதாகப் பத்து ஆராங் ஆசிரியரும், இந்துஅன்பருமான திரு. ஆறுமுகம் தெரிவித்துள்ளதாக மலேஸிய இந்து சங்கத்தின் தலைவர் திரு. கே. பரமலிங்கம் அறிவித்துள்ளார்.

---

## மீஸோ கலகத்தினருக்கு கி. பாகிஸ்தானில் தளம்?

ஷில்லாங், ஏப். 21

சுமார் இரண்டாயிரம் மீஸோ மலைஜாதி இனத்தவர்கள் பர்மாவின் ஒரு பகுதியில் இப்பொழுது இருப்பதாக இங்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

மீஸோ கலகக் காரர்கள் பலர் கிழக்குப் பாகிஸ்தானில் குடிகொண்டிருக்கிறார்கள் என்றும் கிழக்குப் பாகிஸ்தானின் ஒரு பகுதியைத் தங்களது தளமாக அவர்கள் உபயோகித்து வருகின்றனர் என்றும் ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

மீஸோ கலகக்காரர்கள் இங்கு பயிற்சி பெறுவதுடன் இராணுவ உதவிகளும் பெற்று வருகின்றனர் என்று இந்தச் செய்திகள் கூறுகின்றன.

---

## ஈராக் மந்திரிசபை

பக்தாத், ஏப். 21

புதிய பாதுகாப்பு மந்திரி வெளிநாட்டிலிருந்து திரும்பும்வரை ஈராக் பிரதமர் டாக்டர் அப்துல் ரகுமான் அல்பஸாஸ் பொறுப்பில் பாதுகாப்பு அமைச்சு இருக்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது

இப்புதிய நடவடிக்கை, புதிய ஈராக் அதிபருக்கும் முன்னாள்பாதுகாப்பு மந்திரிக்குமிடையேயுள்ள கருத்து வேற்றுமைகளைக் காட்டுவதாகக்கூறப்படுகிறது.

ஈராக்கின் புதிய மந்திரி சபையில், முன்னாள் பாதுகாப்பு மந்திரி ஜெனரல் அப்துல் அஸிஸ் அல்-ஒகெயிலி இடம்பெறவில்லை. இவருக்குப்பதிலாக லண்டனிள்ள ஈராக் தூதர் மேஜர் ஜெனரல் ஷேக்கர்மொகமட் ஷீக்ரி நியமிக்கப்பட்டுள்ளார்.

(பி. டி. ஸி)

---

## அவசரகாலம் நீக்கப்படுமா?

புதுடில்லி, ஏப். 21

இந்திய உள்துறை மந்திரி திரு. குல்ஸாரிலால் நந்தா நாளை கூட்டும் ஒரு மகாநாட்டில், அவசரகால நிலைமை குறித்து விவாதிக்கப்படும். இந்த மகாநாட்டில் ராஜ்ய முதன்மந்திரிகள் எல்லோரும் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு பலர் ஆதரவு தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது,

---

## இந்திராவுக்கு ஆஸி அழைப்பு

கான்பரா, ஏப். 21

ஆஸ்திரேலியாவுக்கு வருமாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு ஆஸி. பிரதமர் ஹோல்ட் அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று இங்குநடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் இந்த அழைப்பை அவர் விடுத்தார்.

---

## பெண்களுக்கு பாரசூட் பயிற்சி

லியப்போல்ட்வில்லி ஏப்.21

காங்கோ அரசாங்கம் பதினாறு இளம் பெண்களுக்கு பாரசூட் பயிற்சி அளித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## ரொடீஷியா

நியூயோர்க், ஏப். 21

இந்தியா, யூகோஸ்லேவியா உட்பட 14 நடுநிலைமை நாடுகள் ரொடீஷியா பற்றி பாதுகாப்பு சபை விவாதிக்கவேண்டும் எனக் கோரியிருக்கின்றன.

ரொடீஷியா விஷயத்தில் பிரிட்டன் எடுத்துக்கொண்ட நடவடிக்கை போதுமானதல்ல என்றும், பொருளாதாரத் தடை, விதிப்பதுடன், ரொடீஷியாவுக்குப் பயன்படும் அறைமுகங்களை முற்றுகை இடவும் வேண்டும் என அவைகள் கோரியுள்ளன.

---

## நாகா பேச்சு நேர்வழியில் ....

புதுடில்லி, ஏப். 21

பகைநாகர்களுடன் நடைபெற்ற பேச்சு சரியான திசையிலேயே செல்வதாயும், ஆனால் அடுத்த சந்திப்புக்குப்பின் என்ன நடக்கும் என்பதைச் சொல்ல முடியாது என்றும் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி லோகசபையில் கூறினார்.

தற்போதைய நாகாலந்து அமைப்பில் எவ்வித மாற்றமும் இருக்காது என்றும் அவர் கூறினார்.

---

## சென்டோவில் பூட்டோ இல்லை!

அங்காரா, ஏப். 21

சென்டோ மகாநாட்டுக்கு அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் போய்ச் சேர்ந்ததையடுத்து அவருக்கெதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் விளைவாக 72 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இதேமகாநாட்டில்பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ கலந்துகொள்ளவில்லையெனக்கூறப்படுகிறது.

---

## 73 மாணவர் கைது

அங்காரா, ஏப். 21

அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன் ரஸ்க் இங்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து நடைபெற்ற அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் காரணமாக 73 மாணவர்களைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

"துருக்கி ஜோன்ஸனின் கைப்பொம்மையல்ல", "அமெரிக்சர்கள் வெளியேற வேண்டும்" என்ற சுலோக அட்டைகளைத்தாங்கிக் கொண்டு அம்மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். (பி.டி.ஸி.)

---

## துருப்புகள் வாபஸ்

வாஷிங்டன், ஏப்ரல் 21

இவ்வருடத்தில் ஐரோப்பாவிலிருந்து 30,000 துருப்புகளை அமெரிக்கா விலக்கிக் கொள்ளும் என்று தெரியவருகிறது. (பி.டி.ஸி.)

---

## கடும் வரட்சிக்குப்பின் நல்ல மழை

துணுக்காய், வியா.

சென்ற சில தினங்களுக்கு முன் இப்பகுதியில் உள்ள பல இடங்களிலும் நல்ல மழை பெய்துள்ளது. இதனால் இங்கு நிலவிவந்த கடும் வரட்சிநீங்கிஉள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உலகத்தமிழாராய்ச்சிமகாநாட்டுகருத்தரங்குக்கட்டுரைகள்

தமிழ் இலக்கியத் திறனாய்வு

## புத்தறிவுக் கலப்பும் புத்துருவாக்கமும்

— சே. தனிநாயக அடிகள் —
(தமிழ்த்துறை, மலாயா பல்கலைக்கழகம்)

தமிழிலக்கியப் பயிற்சியில் முன்னறிவோடு உணர்ந்த ஹெர்பாஞ் எனும் உளநூல் வல்லுனர் (apperception) என்று பெயரிட்ட பண்பனுடைய கருத்து என்னவெனில் ஒருவரிடமிருக்கும் அறிவோடு புத்தறிவு வந்து கலந்து அறிவை வளர்க்கும் முறையேயாம்; இலக்கியப் பயிற்சியில் நாம் புதிதாக ஒரு கருத்தை வாங்கும்பொழுது அக்கருத்து நம்மிடம் ஏற்கனவே இருக்கும் கருத்தின் அளவிற்கேற்பவே வாங்கப்படுகிறது.

வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனைய துயர்வு

என்று வள்ளுவரும் இக்கருத்தினைத் தெளிவாக்கிக் கூறியுள்ளார்.

ஒரு செய்யுளினை மக்கள் தத்தம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு அனுபவிக்கின்றனர்.

'புகழ் மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு' என்னும் அடியினை நினைக்கும்போது வரலாற்றில் சிறந்தவர் தமிழரின் வரலாற்றைப் பற்றி எண்ணுவர்; கலைகளில் ஈடுபடுவோர் தமிழ்நாட்டுக் கலைகளைப் பற்றி நினைப்பர்; மக்களுடைய அறிவு எத்தனை துறைகளில் ஈடுபட்டு வருகிறதோ அவ்வளவுக்கு இலக்கியஅனுபவம் விரிவையும் ஆழத்தையும் பெறும்.

மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் இவ்விருபதாம் நூற்றாண்டு இலக்கியத்தை இலக்கிய அளவுகோல்களை வைத்தே அனுபவிக்கவேண்டுமென்று கூறுவர். இலக்கிய வரலாற்றிற்கு உளநூல் பண்பிற்கு மக்கள் நூலிற்குப் பயன்படும் துறைகளை எல்லாம் ஆராய்ந்த பின் இத்தகைய தூய இலக்கியம் எனும் கொள்கையினை வலியுறுத்துகின்றனர். ஆனால் தமிழ்த்துறைகளில் பயில்வோர் தமிழிலக்கியத்தின் முழுப் பண்பையும் நுகர வேண்டுமாயின் தமிழ் இலக்கியங்கள் சமூக வரலாற்றுத் துறையில் மக்களியல் துறையில் உளப் பண்புத்துறையில் நல்கும் உண்மைகளை எல்லாம் அறிந்திருத்தல் வேண்டும். எவ்வளவுக்குத் தமிழ்த் திறனாய்வாளர் இப்புதுத்துறைகளில் அறிவு பெற்றிருக்கின்றனரோ அவ்வளவுக்குத் தமிழ்த்திறனாய்வு வளம்பெறும்.

நம் உரைகாரரர் பல்வேறு துறைகளிற் சிறந்தவர். ஆயினும் இருபதாம் நூற்றுண்டில் வளர்ச்சிபெற்ற சில துறைகளை அவர்கள் அறிந்திலர். காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றி யவனருடைய இருக்கைகளைப்பற்றி தமிழ்நாட்டுச் சங்ககால வணிகத்தைப் பற்றி அடியார்க்கு நல்லார், நச்சினர்க்கினியர் போன்றோரை விட நமக்கு ஒருவாறு இன்னும் அதிகமாகச் சான்றுகள் கிடைத்துள்ளன.

தமிழ்த் திறனாய்வு தமிழிலக்கியப் பயிற்சி வளம் பெறுவதற்கு இருமுறைகளை நாம் கடைப்பிடித்தல்வேண்டும். ஒன்று இலக்கிய நூலின் சூழமைவு; அடுத்து பண்பாட்டின் சூழமைவு

நூலின் சூழமைவு இலக்கியநூலை அல்லது செய்யுளை நடை இயல்முறையில் ஆராய்ந்து பயில்வது. நடை இயல்முறையோ பின்வருமாறு பிரிக்கப்படும்.

1. மொழி இயல், நடை இயல்.

நூலாசிரியரின் மொழியை வாக்கிய அமைப்பை பயன்படுத்தும் சொற்களை தனி முறையை ஆராய்வது.

2. யாப்பு நடை இயல்.

இது ஆசிரியருடைய யாப்பு முறையால் உண்மைகளை வெளிபடுத்தும் பான்மையை ஆராய்வது.

3. அணி நடை இயல்.

அணிமுறைகளை ஆராய்வது, எடுத்துக்காட்டாக வள்ளுவரின் நூலில் ஒளி, இருள், வெண்மை போன்ற சொற்கள் எத்தகைய உண்மைகளைக் குறிப்பிடுகின்றன என ஆராய்தல்கூடும்.

பாரதிதாசனுடைய 'பாளைச் சிரிப்பு' 'தமிழ்ப் பிழியும் காலை' என்ற சொற்றொடர்கள் புலவரின் கற்பனையைக் காட்டும் பான்மையின.

4. உளப்பண்பு நடை இயல்.

படைப்பிலிருந்து படைப்போரின் உளப்பண்பை ஆராய்வது, கடலை அடிப்படையாகக் கம்பர் எத்தனை அணிகளை அடிக்கடி பயன்படுத்துகிறார்? இவர் கடலில் ஏன் ஈடுபட்டார்? வணிகராக இருந்தாரா? துறைமுகத்தில் வாழ்ந்தாரா? திருமால் வழிபாட்டால் கடல்வண்ணன் கடலில் பாயல்கொண்டான் இவர் கருத்தில் இருந்ததால் கடலை அடிக்கடி நினைத்துப் பாடினாரா? இவ்வாறு ஆராய்வதால் திறனாய்வு தீங்கினை அடையப்போவதில்லை.

நடையியல் முறையில் செய்யுளை ஆய்வதுடன் பண்பாட்டின் சூழமைவுடன் ஆய்வதும் திறனாய்வில் விரிவையும் ஆழத்தையும் தரும்.

சமூக வரலாறு, சமூகப் பண்பாடு. மனஇயல், மக்களியல் தனி உள இயல் நிலை, சமூக உள இயல் நிலை, கவின் கலைகள் இவற்றை பிற்களமாகக்கொண்டு ஒரு நூலினைப் பயிலுதல் வேண்டும். புலவர் எத்தகைய சமூக நிலைகளிலிருந்துதோன்றினர்? சமுதாயத்தில் எங்ஙனம் மதிப்பிடப்பட்டனர்? அவர்கள் எழுதிய நூல்கள் அக்கால சமூக நிலைகளைப் பற்றித்தரும் செய்திகள் யாவை? என்பனவற்றை நூலுடன் ஆராய்தல் வேண்டும்.

தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களும் பரணி குறவஞ்சி, பள்ளு, நாட்டுப் பாடல்கள் ஆகியவையும் வெவ்வேறு இனத்தவரைப் பற்றித் தரும் செய்திகள். மனித இயல்முறையில் ஆராய்ந்தால் பெரும் நன்மைகளைத் தரும்.

> **கோலாலம்பூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலகத் தமிழாரய்ச்சி மகாநாட்டிலும் கருத்தரங்கிலும் ஆராயப்பட்டுவரும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சிலவற்றின் சுருக்கம் இங்குகொடுக்கப்பட்டுள்ளது.**

உளஇயலின்படி நாம் ஆராய்ந்து படைப்போரின் உள்ளத்தையும் மனநிலையையும், கதை மாந்தரின் உள்ளத்தையும். மனநிலையையும் ஆராய்ந்து வந்தால் தமிழ்த்திறனாய்வு இன்னும் வளம்பெறும்.

பாரதிதாசன் வணிகரைப் பற்றிக்கூறியது வணிகர் குலத்தில் தோன்றியதாலா? கம்பன் 'உத்தமன்' என்ற சொல்லைப் பன்முறை கையாளுவது உத்தம சோழனுடைய காலத்தில் வாழ்ந்த காரணத்தாலா! என்பன போன்ற ஆராய்ச்சிகள் வேண்டும்.

கவின்கலை நன்கு உணர்வோரே தமிழிலக்கியத்தை நன்கு சுவைப்பர். ,திங்கள் மூன்றடங்கிய திருமுன் குடைக்கீழ்' என்னும் பொழுது மகா வீரருடைய சிலையையும் கண்டு சுவைத்தால் அவ்வடி இன்னும் சுவையைத் தரக்கூடுமல்லவா?

இக்காலத்தில் மேலைநாட்டுத் திறனாய்வு செய்வோர் பல துறைகளில் ஈடுபடுவர். பல மொழிகளை அறிந்தவர் அத்தகைய விரிந்த அறிவும், பரந்த நோக்கங்களும் கொண்டவரே தமிழ்த்திறனாய்வுக்குப் புதுவழிகளைக் காட்டுவர்.

## தமிழகத்து சைவ சமய நால்வரின் சமூக - சமய அனுபவங்கள்

— தா. ஐ. ஏசுதாஸ் —
(அண்ணமலைப் பல்கலைக்கழகம், தென்இந்தியா)

சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் தமிழ்நாட்டு சைவசமய குரவராவர். அவர்களது சமூக, சமய அனுபவங்களை முறையே மகன்மை நெறி, அடிமைவாழ்வு, தோழமை, சன்மார்க்கம்ஆகியவற்றோடு தொடர்பு படுத்தி கூறுவது வழமை.

ஆனால், அவர்கள் எல்லோருமே இந்த நான்கு வகை அனுபவங்கள் கைவரப்பெற்று இருந்தனர் என்பது அவர்களது வேறு பாடல்களால் விளங்குகின்றது. இவற்றைத்தவிர வேறு பல சமூக, சமய அனுபவங்களையும் அவர்கள் அனுபவித்திருந்தனர்.

திருஞானசம்பந்தர் குழந்தை உள்ளம் கொண்டிருந்தார். அவர் சிவபெருமானை நேரிலே கண்டு அனுபவித்தவர். சில சமூக, சமய பூசல்களில் பங்கு பற்றி வெற்றி வாழ்க்கை நடத்தியவர். அவரது தேவாரப் பதிகங்களின் புனல்வாதத்தோடு தொடர்புடைய திருப்பாசுரம் அவரது சமய அனுபவத்தைக் காட்டும் பல பகுதிகளில் ஒன்று.

அப்பர் துன்பங்கள் பலவற்றை மேற்கொண்ட அடியார்; விவிலியத்தில் கூறப்பட்டுள்ள யோபு, தானியேல், பவுல் என்பவர்களின் அனுபவமும் இவரது அனுபவமும் சிற்சில காரியங்களில் ஒன்று போன்றுள்ளன; பல முரண்பாடான கொள்கைகளையும், அனுபவங்களையும் அவர் இணைத்தார். அவற்றுள் ஒன்று தபா மூல தன்மம். இது அருளையும் கர்மத்தையும் பிணைக்கிறது. அப்பர் சமூக சேவையை சமய சேவையாகக்கொண்டு வாழ்ந்து காட்டியவர்.

சுந்தரர் சிவத்தொண்டர்களின் கூட்டுறவைப் பெரிதும் போற்றியவர். இவர் சிவனோடும் சைவ அடியார்களோடும் நட்புமுறையோடு பழகியவர். கடவுள் வழிபாட்டில் அடியாகிப் பிறந்ததே இவரது சமூக, சமய அனுபவம்.

மாணிக்கவாசகரது சமூக சமய அனுபவத்தில் நான்கு நிலைகளைக்காணலாம்.

அவையாவன: கடவுளற்ற நிலை, கடவுளைப் பற்றிய நிலை, கடவுளை விட்டநிலை, கடவுள் பக்கம் திரும்பிய நிலை. இவையாவும் கடவுள் தொடர்பையும், மானிட தொடர்பையும் அடிப்படையாகக் கொண்டவை.

கிறிஸ்த்தவத்தின் நால்வரான மத்தேயு, மாற்கு லூக்கா, யோவான் ஆகியோர் போன்று சைவசமயத்தில் மேலே கூறப்பட்ட நால்வரும் திகழ்கின்றனர்.

சைவமும் வைனவமும் சமூக வாழ்வை முக்கியப்படுத்துகின்றன. அவை சமூக வாழ்விற்குப் புறம்பானவை அல்ல.

## பழந்தமிழிலக்கியத்திற் பரத்தையர்

— வெ. தெ. மாணிக்கம் —
(தமிழ் ஆராய்ச்சித்துறை சென்னைப் பல்கலைக்கழகம்)

பெண்பாலாருள் பொதுவாக இருவகையினர் இருப்பதைத் தமிழிலக்கியம் காட்டுகிறது. 'ஒருத்திக்கு ஒருவன்' எனும் உயர் கொள்கையை உயிருள்ளவரை பற்றி நின்று ஒருமை மகளிராய் உலகோர் புகழ உயர் வாழ்வு வாழ்வோர் ஒருவகையர். தம்மனம் போனவாறே பல ஆடவரோடு கூடிப் பல்லாற்றானும் ஒழுகுபவர் மற்றொரு சாரார். முன்னவரைத் தமிழ் நூலோர் 'கற்புடைமகளிர்' எனச் சிறக்கவும், பரக்கவும் பேசுவது வெள்ளிடைமலைபோற் றெள்ளியதாம் பின்னவர் ஒருசேரப்'பொது மகளிர்' எனக் குறிக்கப் பெறுதல் பெரு வழக்காக இருந்தபோதிலும் அவருள் முத்தரத்தினர் இருந்தமை புலனாகிறது.

குடிப்பிறப்பால் இழிந்தாராயினும் அவருள் சிலர் தன்மனம் விரும்பிய ஆண்மகனை மணந்துகொண்டு அவனுடன் கூடி பெருங்குலக் கற்பினர் போல் இல்லுறைந்து நல்லறம் மேற்கொண்டு 'காமக்கிழத்தியர்' என உயர்வாகப் போற்றப் பெற்றனர். வேறுசிலர் பல் மொழியறிந்து பல்கலை கற்று, ஆடலும், பாடலும் வல்லவர்களாய் விளங்கினரி. தம் ஆடற்றகைமை, பாடல் தகுதிகாரணமாக 'ஆடலங்கனிகையர்' என அரசர்களும் மதிக்குமளவுக்கு வாழ்ந்தனர். அழகும் இளமையுங் காட்டி இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டு நிலையாகத் தங்காது, தம்மனம் போற் கட்டுப்பாடின்றி வாழ்ந்தவர்கள் 'வரையின் மகளிர்' எனப் பட்டனர்

பிற்காலத் தமிழ்ப் புலவோர் தம்மை ஆதரித்த அரசர்களுளடைய அவைகளில் தம் பாவன்மை காட்டுவான் பரத்தையர் பற்றியும், அவர்களுடைக சேரி, இல், செயல்குறித்தும் வரம்பின்றி விரித்துரைத்த நிலைக்குமாறாக பண்டைச் சங்கப் புலவோர் குன்றக் கூறலும் மிகைபடக் கூறலுமின்றிப் பரத்தைமையைப் பற்றிக் குறித்துள்ளனர். எக்காலத்திலும், எந் நாட்டிலும் மக்கள் வாழ்வில் இருந்து வந்துள்ள இக்குறை பெருமை மிக்க சங்க காலத் தமிழ்ச் சமுதாயத்திலும் இருந்தது எனக் குறிப்பிடுவது தமிழர் தம் மாண்புக்கு இழுக்கு என எண்ணி அதனை அறவே மூடிமறைக்காமல், இலக்கியம் காலக்கண்ணாடி, உலக வாழ்வின் கூறுகளை ஒழுங்குபடுத்திக் காட்டுவது என்பதற்கேற்ப அப்பொய்யில் புலவோர் அற்றைச் சமுதாய இயல்பை உண்மை நவிற்சியாகப் பட்டாங்குத் தத்தம் பாக்களில் குறித்துள்ள திறம் வியந்து போற்றற்குரியது. 'பண்டைத் தமிழ்நாடு பரத்தையர் பெருகிய நாடு' என்று தம் பாக்களைக் கற்பார் பிழையாக உணராவாறு. அரசர்கள், கொழுங்குடிச் செல்வர்கள் போலும் இடுக் கணறியா இயல்பினருட் சிலருடைய வாழ்வில் மட்டுமே இப்பரத்தைமை இடம்பெற்றிருந்தது எனவும் எனினும் இவ்வொழுக்கம் தவறுடைத்தே எனவும் வாய்ப்புழியெல்லாம் அன்னார்சுட்டத் தவறியதே இல்லை.

கற்புறுதிமிக்க தமிழினக் கட்டுப்பாட்டுக்கிடையே ஓரளவு மதிப்புடன் பண்டு நிலவிய பரத்தைமை, அற்றைச் சமுதாயத்தில் பொது மக

(3 ம் கலம் பார்க்க)

## தென்கிழக்காசியாவில் திருப்பாவை, திருவெம்பாவை

— தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் —
(துணைவேந்தர் மதுரைப் பல்கலைக்கழகம்)

இரண்டு நாடுகள் உறவு கொள்ளும்போது அவ்விரு நாட்டுப் பண்பாடுகளும் ஒன்றிக்கலத்தல் இயல்பே. தமிழர்கள் கிழக்காசிய நாடுகளுக்குச் சென்றபோது அவர்களோடு தேவார திருவாசகங்கள், மந்திரங்கள், சடங்குகள் அனைத்தும் உடன்சென்றன அந்நாட்டுத் தொடக்கக் கோட்பாடுகளுக்கும், தமிழகத்திலிருந்து சென்ற கோட்பாடுகளுக்கும் இணக்கம் காணுதல் நாட்டு ஒருமைப்பாட்டுக்கு இன்றியமையாததாயிற்று.

அரசன் ஒரு பிரிவினருக்கே தலைவன் என்றில்லாமல் இரு திறத்தாருக்கும் தலைவனாக இருந்தான். எனவே முடிசூட்டுவிழாவிலும்இவ்விரு பண்பாடுகளின் இணைப்பினைக் காண்கின்றோம். தமிழ்நாட்டில் 'பள்ளிச்சந்தம்' கோவில்களுக்கு அடிப்படையாகஇருந்த மன்னனைக் கடவுளாகக் கருதும் கோட்பாடே வெளிநாட்டில் வளர்ச்சி அடைந்து 'தேவராசா' கோட்பாடாக மலர்ந்தது தேசியத் திருவிழாக்களிலும் முரண்பட்ட கோட்பாடுகளின் இணைப்பினைக் காணலாய். ஆக்கரமான சமுதாய முயற்சி என்று இதனைக் கூறலாம்.

சமுதாய இணக்கம் தாய்லந்தில் பாராட்டத்தக்க நிலையில் உள்ளது. இந்துக் கோவில்களிலும் பல தெய்வங்களைக் காண்கிறோம். 'சுகோதயப் பெருமாள்' என்னும் தேசிய மூர்த்தியின் திருப்பெயரிலும் தமிழ்த் தொடர்பினைக் கண்கின்றோம்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

ளிர் நிலை, நகர வாழ்வில் அன்னர் பங்கு, இசை, நடனம் என்றினைய நுண்கலைகளில் அவர்கட்கிருந்த ஈடுபாடு, அவர் தம் நுண்ணுணர்வு, கலைத்திறம், கேளிக்கை, பொழுது போக்கு அனுபவத்தை உள்ளவாறே காட்டுவது இக்கட்டுரையின் உட்கோளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யாழ்ப்பாண விஜய நோக்கம் வெற்றி"

யாழ்ப்பாணம், வெள்ளி "யாழ்ப்பாணத்துக்கு நான் வந்ததனுல் இதுவரை இப்பகுதி பற்றி நான் கொண்டிருந்த பல கருத்துக்களை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. யாழ்ப்பாணத்துக்கு நான் வந்த நோக்கம் வெற்றியளித்திருக்கிறது. பல்வேறு சமய, சமூக மக்களின் கலாச்சாரங்களையும் விளக்கும் கண்காட்சியொன்றை தலதா மாளிகையில் விரைவில் ஏற்பாடு செய்யவும் உத்தேசித்துள்ளோம்''.

இவ்வாறு மல்வத்தை மடாதிபதி அமுனுகம ஸ்ரீ விபாஸி தேரோ நேற்றுக் காலையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 42 கிராம சபைத் தலைவர்கள் சமாசத்தின் சார்பில் யாழ்ப்பாணம் கோட்டையில் உள்ள இராச மாளிகையில் மகாநாயக்க தேரோவுக்கும் மல்வத்தைப் பீடத்தின் முக்கிய நிர்வாகத் தேரோக்களான அறுவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

யாழ். மாவட்ட சபைகளின் சார்பில் சமாஜத் தலைவர் திரு. ஏ. ஜி. இராஜசூரியர், திருமதி இராஜசூரியர், சமாஜக் காரியதரிசி திரு. வி. ஆனந்தசங்கரி, தனுதிகாரி இ. இராமலிங்கம் ஆகியோர் பௌத்த குருமார்களுக்கு தானம் வழங்கிய பொழுது அவர்களைத் தொடர்ந்து மற்றைய கிராமச்சபைத் தலைவர்களும் தங்கள் தானத்தை வழங்கினர்.

இத்தருணத்தில் மல்வத்தைப் பீடத்தைச் சேர்ந்த நிர்வாகக்குருமாருள் ஒருவரான கண்ணிவதுவே டம்மிஸ்யெரு என்ற தேரோ தமிழில் பேசுகையில், தானங்களில் பெரியது அன்னதானமென்றும், அன்னதானம் செய்பவர்களுக்கு சகல சம்பத்துக்களும் கிடைக்க தாங்கள் பிரார்த்திப்பதாகவும் கூறினுர்.

யாழ் மாவட்ட கிராம சபைத்தலைவர்கள் சமாசத் தலைவர் திரு. ஏ.ஜி. இராஜசூரியர் பேசுகையில் கூறியதாவது: சமாதானமும் சாந்தியும் நிலவவேண்டும்என்று உலகிற்கு வழிகாட்டியபுத்த பகவானின் தூதுவர் என்ற முறையில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கிராம சபைத் தலைவர்கள் தங்களை வரவேற்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிருர்கள்.

சிங்களமொழியைக் கற்பதில் எங்களுக்குஎவ்விதஆட்சேபனையும் இல்லை. ஆனுல் தமிழ்பேசும்மக்கள் தங்களுடைய மொழிக் கௌரவம் குறையாத விதத்தில் சுயகௌரவத்துடனேயே சிங்களமொழியைக் கற்கவேண்டும் என்று அவாவிநிற்கிருர்கள்.

ஆதலால் தமிழ் மக்களுடைய சுயகௌரவத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளில் திருத்தமும் மாற்றமும் அரசினர் கொண்டுவருவதற்கு ஏற்ற ஆலோசனைகளை அரசினருக்குத் தாங்கள் நல்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

இராஜகுரு மகாநாயக தேரோ பதிலளித்துப் பேசும்போது கூறியதாவது: கடந்த காலத்தில் இருந்த எனது கருத்துக்கள் பலவற்றை யாழ்ப்பாண விஜயத்தினுல் இன்று மாற்றிக் கொண்டிருக்கிறேன்.

நாங்கள் தமிழ் மக்களில் அதிக நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கிறோம், எங்களுடைய தோட்டங்கள் போன்றபல முக்கியநிர்வாக வேலைகள் எல்லாவற்றிற்கும்தமிழ்மக்களையே பொறுப்பாக நிர்வாகிகளாக வைத்துள்ளோம். அவர்கள் எங்களுக்கு மிகவும்தேவையானவர்கள். விசுவாசமாகவும் கடமையாற்றுகிறுர்கள்.

கடந்த காலங்களில் தமிழ் பிள்ளைகளே பல்கலைக்கழகத்தில் சட்ட, விஞ்ஞான, வைத்திய நில அளவைப் பகுதி வகுப்புக்களில் பெரும்பாலானவர்களாக இருந்தார்கள். நாட்டின் நிர்வாக அலுவல்களை நடாத்தும் அரசாங்கத்திலும் பொறுப்பான பதவிகளை வகித்தார்கள். அவர்களுடைய சேவைகளை நாடறியும். இந்த நிலைமை இன்று மாறியுள்ளதாயினும் இதனுல் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களிடையே கல்வி கலாச்சார விடயங்களைப் பற்றி நான் கொழும்பு சென்றதும் கல்வி மந்திரியுடன் தொடர்புகொண்டு ஆகவேண்டியவைகளைச் செய்வதற்குமுயலுவேன்.

## 'நாமக'ளுக்கு வெற்றி கேடயம்

உடுப்பிட்டி, வியாழன் கரவெட்டி மேற்கு காங்கிரஸ் வாலிப முன்னணியினர் நடாத்திய புத்தாண்டு விளையாட்டுப்போட்டியில் தாச்சி விளையாட்டில் பற்குபற்றிய கழகங்களுள் கரவெட்டிகிழக்கு நாமகள் விளையாட்டுக் கழகம், சிந்தாமணி விளையாட்டுக் கழகத்தையும், மேல் கரவை விளையாட்டுக் கழகத்தையும் முறையே 35—15 35—15 புள்ளிகளால். வெற்றிபெற்றது. வெற்றிக் கேடயத்தை நாமகள் விளையாட்டுக்கழகம் சுவீகரித்துக் கொண்டது.

## கிரிக்கெட் போட்டி
### திகதி மாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ். பாடசாலைகள்தெரிவுக்கோஷ்டிக்கும் கொழும்பு தெற்கு பகுதிக் கோஷ்டிக்குமிடையில் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும்நடைபெறவிருந்த கிரிக்கெட் போட்டி இம்மாதம் 29-ம் 30-ம் திகதிகளில்நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## எரிகாயங்களுடன் 8 மைல்

நுவரெலியா, வியா. போத்தல் விளக்கினுல்ஏற்பட்ட விபத்தில் சிக்கிய திருமதி அனுலாவதி என்ற பெண்ணை, எரிகாயங்களுடன் சுமார் எட்டு மைல்களுக்கு அப்பாலுள்ள புசல்லாவ ஆஸ்பத்திரிக்கு அயலவர்கள் கதிரையில் அமர்த்தித்தூக்கிச்சென்றனர்என்ற விபரம், அவரது மரணவிசாரணையின்போது தெரியவந்தது.

உதவிக்குச்சென்றஅவரது கணவரும் இரு குழந்தைகளும் எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பிரயாணிகள் கஷ்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி கொழும்புத்துறைப் பகுதியில் துண்டிச்சந்தியிலிருந்து துறைமுகம் வரை பஸ் தரிப்பு நிலையங்கள் இல்லாததால் பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுவதாக அறியப்படுகிறது.

அப்பகுதிக்குப் புதிதாகச் செல்லும் பஸ் சாரதிகள் பஸ் நிறுத்தப்படவேண்டிய இடங்களை அறிந்துகொள்ள முடியாமல் திண்டாடுவதாகவும் அதேபோல பிரயாணிகளும், எவ்விடத்தில் நின்று பஸ்ஸில் ஏறுவதென தெரிந்துகொள்ள முடியாமல் கஷ்டப்படுவதாகவும் தெரிகிறது. சில தினங்களில் பஸ்கள் நேர அட்டவணைக்கு முந்தியும் பிந்தியும் செல்வதால், வழக்கமாக காரியாலயங்களுக்குச் செல்லும் உத்தியோகத்தர்களும், வர்த்தகர்களும், ஆஸ்பத்தரிக்குச் செல்லும் நோயாளிகளும் கஷ்டமடைவதாகவும் கூறப்படுகிறது.

## கிணற்றுள் விழுந்த குழந்தை மரணம்

அச்சுவேலி, வியா. காரைநகர் மேற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த சுப்பிரமணியத்தின் 18 மாதம் நிரம்பிய புதல்வனுன லோகநாதன் என்பவர் அண்மையிலுள்ளகிணற்றுள் தவறி விழுந்து மரணமானுர்.

இந்த மரணம் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையில் தீர்ப்பளிக்கையில் குழந்தை தற்செயலாக கிணற்றுள் விழுந்து மூச்சுத்திணறி மரணமானது என்று மரணவிசாரணை அதிகாரி திரு. வே. கந்தசாமி தெரிவித்தார். குழந்தைகளை வளர்ப்பதில் கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டுமென்றும் குழந்தைகளைப் பொறுப்பின்றி விட்டுச் செல்லக்கூடாது என்றும் மரணவிசாரணை அதிகாரி குறிப்பிட்டார்.

## எழுத்தாளர்களின் தனித்தன்மை

சென்னை, ஏப். 19 எழுத்தாளர்கள் தனித்தன்மை படைத்தவர்கள் என்றுலும் பொதுவான மனிதத் தன்மையின் அடிப்படையில் ஒன்றுபட்டு செயலாற்றவேண்டும் என்று சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினர் தினத்தையொட்டி நடைபெற்ற வைபவத்தில் டாக்டர் மு. வரதராசன் கூறினுர்.

இந்த வைபவத்தில் திரு. ம. பொ. சிவஞானம் பேசியபோது, ஆராய்ச்சி அறிஞர்களுக்குப் பயன்படும் தகவல் நூல்களையும், ஒப்புநோக்கும் மொழி பெயர்ப்பு நூல்களையும் [illegible] டும் என்று கேட்டுக்கொண்டார்.


## வரி விளம்பரம்

### தேவை

தாதிமார், பணிப் பெண்கள், பணக்கணக்காளர், லிகிதர் ஆகியோர் தேவை. விபரங்களுக்கு நேரில் காணுங்கள். சாரதாதேவி வைத்தியசாலைச் சங்கம், சட்டநாதர்வீதி—நல்லூர் யாழ்ப்பாணம். 249

### விற்பனைக்கு

தனிப்பாவிப்பில் உள்ள A 50 EN 5817 இலக்ககார் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு பெரிய ஆஸ்பத்திரி, யாழ்ப்பாணம். 250

புளியங்குளத்திற்கு அருகாமையிலுள்ள அரிசிமில்லில் C. E. 9614, 10—4 சொந்தப் பாவிப்பிலுள்ள கார் விற்பனைக்குண்டு. 248

### தேவை

ஆங்கிலத்தில் தட்டெழுத்துத் தெரிந்த, தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் நல்ல கையெழுத்துள்ள லிகிதர் / கஷியர் தேவை. பிணை ரொக்கம் ரூபா 500/- கட்டக்கூடியவராக இருக்க வேண்டும். 26-4-66க்கு முன் விண்ணப்பிக்கவும். S. K. கணேசன், 85, சிலாபம் வீதி, கொச்சிக்கடை, நீர்கொழும்பு. 252

பேக்கரியில் பணப் பொறுப்பாளராகவும் உதவி மனேச்சராகவும் கடமை செய்யக்கூடியவர் தேவை. சிங்களம் நன்கு பேசத் தெரிந்திருத்தல் நலம். பிணை ரொக்கம் ரூபா 500/- கட்டக்கூடியவராக இருத்தல் வேண்டும். S. K. கணேசன், 85, சிலாபம் வீதி, கொச்சிக்கடை, நீர்கொழும்பு. 253

சாய்ப்புச்சாமான் சில்லறை வியாபாரக் கடைக்கு திறமையானவர்கள் தேவை. சிங்களம் பேசும் அறிவு விரும்பப்படும். S. K. கணேசன், 85, சிலாபம் வீதி, கொச்சிக்கடை, நீர்கொழும்பு. 254

பெற்ரேல் விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை. இரு பாலாரும் (ஆண் பெண்) விண்ணப்பிக்கலாம். பிணைப் பணம் ரூபாய் 1,500/- வே. சோமசுந்தரம், நல்லூர் சந்தை, யாழ்ப்பாணம். 241


## தமிழும் சிங்களமும் . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சேர்ந்த சகலரும் ஒரு மனதுடன் எம்மை வரவேற்றது பௌத்த உலகிற்களித்த கௌரவமாகக் கொள்கிறேன்.

### சிங்களமும் - தமிழும் கற்கவேண்டும்

இப்பகுயில் வாழும் மக்கள் சிங்களம் கற்பதற்கு ஆவலுடையவர்களாக இருக்கிருர்கள். அவர்களுடைய ஆவலைப் பூர்த்திசெய்ய முயற்சி எடுப்போம். சிங்கள மக்களும் தமிழைக் கற்க ஆர்வங்காட்டினுல் எங்களுக்கிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுவதுஉறுதியாகும். எமது விஜயம் எமது நாட்டு மக்களுக்கு நன்மையை ஏற்படுத்துமாக.

எம்மைக் கௌரவிப்பதில் எங்கள் அரசாங்கமும் வடமாகாண அதிபரும் ஏனைய அதிகாரிகளும் பொலிஸ் அதிபர் உட்பட ஏனைய உத்தியோகத்தர்களும் இந்துக்கள் உட்பட சகல மதத்தினரும், சகல மதகுருக்கள்மாரும், பாராளுமன்ற உறுப்பினர்களும் நகரசபைத் தலைவரும், உறுப்பினரும் கிராமச் சபைத் தலைவர்களும், காரியாதிகாரிகளும் மிகவும் ஆர்வங்காட்டியதாகத் தெரிகிறது.

## 'காலம் மாறுகிறது'

கிளிநொச்சி, வியாழன் 'அரசாங்கத்தில் உத்தியோகம் பார்ப்பவர்களையே மணமகனுக்கவேண்டும் என்ற திடசித்தம் கொண்டிருந்தவர்களெல்லாம் இப்பொழுது விவசாயியாக இருக்கும் மகனைத் தேடித் திரிகிருர்கள்' என விவசாய புதுத் தம்பதிகளுக்கு தமிழர் அறநெறிக் கழகம் கனகபுரத்தில் அளித்த விருந்துபசார வைபவத்தில் மேற்படி கழகத் தலைவர் திரு. எம். ஜே. வோல்ட்டர் கூறினுர். கழக காரியதரிசி திரு ஆர். பி. குலநாயகமும் பேசினுர்.


## திருமணம்

காராளசிங்கம் (குடிசன மதிப்புப்புள்ளிவிபரப்பகுதி) — இராஜேஸ்வரி (ராஜி)

மணமகள் இல்லத்தில் 23-4-1966 சனிக்கிழமை இரவு 10 மணிக்கு நடைபெறும். வேறு தனிப்பட்ட அழைப்பு இல்லாதபடியால் சமூகந்தந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கக் கோருகிறோம். நல்வரவைவிரும்பும்

மணமகன் பெற்ருர்:
திரு. இ. சின்னத்துரை (புரொக்டர்), பாரியாரும்.
31, கல்லூரி வீதி, வண்ணுர்பண்ணை.

மணமகள் பெற்ருர்:
திரு. S பொன்னுத்துரையும், பாரியாரும்
சகோதரர்கள்; S P விக்கினேஸ்வர A.V.M. ஸ்ருடியோ, S.P. விஜயேந்திரன் கொக்குவில் இந்துக்கல்லூரி, S.P. சிறினிவாசன் மகாஜனக் கல்லூரி நாவலர் வீதி, திருநெல்வேலி வடக்கு. 11[illegible]

## தேசிய மனப்பான்மை கொண்டிருங்கள்!
## குண்டசாலை அரிசி

அருந்தி உங்களது நாட்டுக்காக பணத்தை சேமித்து இதனுல் உங்களது சுகாதார நிலையையும் உங்களது பிள்ளைகளின் சுகாதார நிலையையும் சீராக்குங்கள்.

- மண், கல் இல்லாத நூறு வீத சுத்தமான அரிசி.
- கேடு விளைவிக்கும் துர்நாற்றம் 100 வீத மற்றது.
- முழுமையான சத்துள்ளது.
- சுவையான அவித்த புழுங்கல் அரிசி,

ஜெர்மன் அரிசி ஆராய்ச்சி நிபுணர்களால் ''நாங்கள் சென்ற நாடுகளில் பார்வையிட்ட மிகச் சிறப்பாக அமைக்கப்பட்ட ஆலை'' என்றும் இந்த ஆலை மூலமாக வரும் அரிசி மிகவும் சிறந்தது'' எனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்ட நவீன ஆலையில் தயாரிக்கப்பட்ட புழுங்கல் அரிசி.

குண்டசாலை அரிசியை நீங்கள் சமையல் செய்யும் போது கூடிய சாதம் பொலியும் ஏனெனில் குறுணி இல்லாமலும் மூன்று மணித்தியாலங்கள் மட்டும் அனலில் காய வைக்கப்பட்டுள்ளது

இன்றே குண்டசாலை அரிசியைப்பரீட்சித்துப் பாருங்கள் பின்னர் நீங்கள் இதையே எப்பொழுதும் வாங்குவீர்கள்.

தான்ய உற்பத்தி ஆலை, குண்டசாலை,
போன்: 808
குருதேனியா.

கொழும்பில் விநியோக நிலையம்:
சிலோன் மிட்கன்றி ட்றேடிங் ஏஜென்ஸி
181, பழைய சோனக தெரு. கொழும்பு-12.
போன்: 4912


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தியேட்டர்களில் சுகாதார வசதிகள்

## யாழ். மேயர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி 'யாழ்ப்பாண நகரிலுள்ள சினிமாத்தியேட்டர்களின் சுகாதார நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. மேலதிக ஆசனங்கள் போடப்பட்டு ரஸிகர்கள் மிகவும் நெருக்கமாக அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

நேற்று முன்தினம் காட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் திடீரென இரு தியேட்டர்களுக்கு விஜயம் செய்த யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிரட் துரையப்பா நேரில் இவற்றைக் கண்டதாக நமது நிருபரிடம் தெரிவித்தார்.

தியேட்டர்களில் காற்றோட்ட வசதி குறைவாக இருப்பதாகவும், மின்சார விசிறிகளில் சிலது பழுதடைந்துள்ளதாகவும், ரஸிகர்களுக்கு மற்றும் பல அசௌரியங்கள் இருப்பதாகவும் மேயர் தெரிவித்தார்.

இவ்விஷயமாக இம்மாத இறுதியில் தியேட்டர் மனேச்சர்களைக் கொண்ட ஒரு மகாநாட்டைக் கூட்டுவதற்கு மேயர் ஒழுங்கு செய்துவருகிறார்.

---

## யாழ். போக்குவரதது கமிட்டிக் கூட்டம

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் நகரசபையின் போக்குவரத்துக்கமிட்டிக் கூட்டம் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் இம்மாதம் 30-ம் திகதி நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் மராமத்து இலாகா உத்தியோகத்தர், இலங்கை போக்குவரத்துசபை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்து கொள்வார்கள்.

யாழப்பாண நகரின் போக்குவரத்து அபிவிருத்தி பற்றியும் மற்றும் பல விஷயங்கள் குறித்தும் ஆலோசிக்கப்படவிருக்டறது.

---

## உரியவர் யார்?


யாழ்ப்பாணம், வெள்ளி இங்கை வங்கி காசோலையொன்று கீரிமலை-மாவிட்டபுரம் வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சிகளுடன் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியூ ஈலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி
நடித்த
எங்கள் வீட்டுப்பிள்ளை

ராஜா
(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-45க்கு மட்டும்
எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி
கலரி 50 சதம்.

REGAL--JAFFNA
NOW SHOWING!
PEDRO ARMENDARIZ
in
SONS OF THUNDER
(Techni Color)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனோரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

## மின்சாரக் கம்பங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி மாநகரசபைக்கு சொந்தமான ஆறு மின்சாரக்கம்பங்களை 6-ம் வட்டாரத்தில் இருந்து ஸ்ரோருக்குக் கொண்டுவருவதற்கு மாநகர சபை ஊழியர்கள் எடுத்த முயற்சி பலனளிக்காததால் கடைசியில் யாழ்ப்பாணப் பொலிசாரின் உதவியை நாடவேண்டியிருந்தது

இக்கம்பங்களை எடுத்துவர மாநகர சபை ஊழியர்கள் சென்ற பொழுது கம்பங்களின் மேல் சிலர் உட்கார்ந்து தடுத்ததாகவும் இதன் பின்பொலிசாருடன் சென்று கம்பங்கள் எடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகுறது.

இவ்விஷயமாக மேயரிடம் நமது நிருபர் கேட்டபொழுது, 6-ம் வட்டார வேலைகளுக்காக இக்கம்பங்கள் ஒதுக்கப்படவில்லை என்றும் இக்கம்பங்கள் மாநகர சபை ஸ்ரோருக்கு கொண்டு வரப்படவேண்டியிருந்ததால் அக்கம்பங்கள் கொண்டு வரப்பட்டதாகவுல்கூறினூர்

---

## நாட்டின் குறைகளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாக இந்த நாட்டிலுள்ள இரண்டு பெரிய சமூகங்களுக்கிடையில் ஒருமாதிரியான உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுவந்துள்ளது. தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்ததன்பயனுக ஐக்கியமும் அமைதியும் கொண்ட புது சகாப்தம் ஒன்றுக்குள நாம் பிரவேசிக்கின்றோம்.

அடுத்ததாக நாட்டிலுள்ள ஜனநாயக ஸ்தாபனங்களைப் பாதுகாக்க வேண்டிய பிரச்னையையும் எதிர்நோக்கியது எம். பி. மார்களின் பேச்சுரிமைக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்தவும், பத்திரிகைகளின் உரிமைகளைப் பறித்துவிடுவதற்கும் கூட முயற்சகள் மேற்கொள்ளப்பட்டன. நாம் ஜனநாயகத்தைப் பாதுகாத்து நிலைநிறுத்தியுள்ளோம். மூன்றாவதாக வங்கரோத்தான திறைசேரியின் பிரச்னையை நாம் எதிர்நோக்கியுள்ளோம். இதனைச் சமாளிக்க நிறையப் பொருளாதார உதவி நமக்குத் தேவைப்படுகின்றது.

தோட்டங்களில் உபஉணவுப் பொருட்களை பெருமளவில் பயிர் செய்ய தோட்டத் தொழிலாளருக்கு ஊக்கமளிக்கும்படி தோட்டத்துரைமார்களை ராஜங்க மந்திரி கேட்டுக்கொண்டார்

## இசைவிழா!

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சனசபாவின் 15-வது ஆண்டு இசைவிழா நிகழ்ச்சிகள் இன்று ஆரம்பமாகின்றன. யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியிலுள்ள சன்மார்க்க போதனு ஆங்கிலவித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும் மேற்படி இசை விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு;

5-00 நாயகர் பூசை, 5-15 மேளம் — நாதஸ்வர வித்துவான் திரு. பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை கோஷ்டி, 9-45 பாட்டு—யாழ்ப்பாண ரசிகரஞ்சனசபா சங்கீதக் கல்லூரி மாணவர்கள், 7-15 திரு. வி. சுந்தரலிங்கம் பாட்டு, திரு. ஏ. சிவசாமி வயலின், திரு. டி. ஜெயசுந்தரம் மிருதங்கம், 8 30 தலைமையுரை — முத்தமிழ் மணி சி. எஸ். எஸ். மணி பாகவதர், 8-45 திருமதி பரஞ்சோதி இராசமாணிக்கம் - பாட்டு, செல்வி ஞானம்பிகை முருகேசு-வயலின், திரு. வி. அம்பலவாணர் - மிருதங்கம், 10-00—11-15 கதாப்பிரசங்கம்-யாழ்ப்பாணக்கல்லூரி இசைத்தமிழ் ஆசிரியர் திரு. தா. [illegible] னும் திருப்புகழ் பற்றியது'

# எழுதுமட்டுவாள் வரை டபிள்டெக்கர் செல்லும்

## உதவிமந்திரி அறிவிப்பு

சாவகச்சேரி, வியாழன் "3000 வாக்காளர்வரையிலுள்ள மிருசுவில் கிராமத்திலுள்ளோர் கொடிகாமத்தை நோக்கிச் செல்லும் பஸ்ஸில் ஏறுவதற்கு மணித்தியாலக் கணக்கில் காத்திருந்தும் வசதி கிடையாது, திண்டாடி கொடிய வெய்யிலில் ஒன்றரை மைல் தூரத்தையும் நடந்தே போகவேண்யிருக்கின்றது. காரணம் நெடுந்தூரப் பிரயாணம் செய்யும் பஸ்களும் கடுகதி பஸ்களும் மிருசுவிலுக்கு வரும்பொழுது அதிகநெருக்கத்தோடேயே வருகின்றன.

எழுதுமட்டுவாள் நோக்கிச் செல்வதற்கோ, யாழ்ப்பாணத்தை நோக்கிச் செல்வதற்கோ பஸ் ஏறக் கொடிகாமமே செல்லவேண்டி இருக்கின்றது.

இதற்கு, முதலாவதாக மிருசுவிலே ஓர் பிரிவாக்க வேண்டும். இரண்டாவதாக யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் வரை செல்லும் டபிள்டெக்கர் பஸ்களை எழுதுமட்டுவாள் வரையும் போய்த் திரும்பி வரச் செய்ய வேண்டும்" இவ்வாறு மிருசுவில் வடக்குக் கிராமமுன்னேற்றச் சங்கச் சார்பில் மேற்படி சங்கத் தலைவரும் மிருசுவில் கிராமசபைத் தலைவருமான திரு. வி. அம்பலவாணர் தேசியமயசேவைகள் உதவி மந்திரி திரு. டி. பி. வெலகதொராவுக்கு சங்க மண்டபத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்துக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறினூர்,

சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் உதவி அமைச்சரை வரவேற்றுப் பேசுகையில் "எமக்கு அளிக்கப்படவிருக்கும் வசதிகள் காலந்தாமதிப்பதாக இருந்தாலும் காலஎல்லையைக் கூடியளவு அப்பால் கூறி, உரிய காலத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்றூர்.

'டபிள்டெக்கர்' பஸ்கள் இரண்டொருமாதத்திற்குள் எழுதுமட்டுவாள்வரை சேவைசெய்ய தாம் முயற்சி மேற்கொள்வதாக உதவி அமைச்சர் உறுதி தெரிவித்தார். தமக்கு அளித்த அன்பான வரவேற்புக்கு முதலாவதாகஅவ்வூர் மக்களுககும் அடுத்ததாக இச்சந்தர்ப்பத்தைஆக்கித்தந்த எம். பி. திரு. நவரத்தினத்திற்கும் தாம் நன்றிகூற விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

## சதிமுயற்சி . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விரும்பினுல் போய் பார்க்கலாம் என்று டாக்டர் பெரேராவிடம் கடந்த வாரம் பார்லிமெண்டில் ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்தன சொன்னது இங்கு குறிப்பிடத்தக்கது.

நான் விஜயம்செய்ததற்காக கைதிகள் அதிகமான சலுகைகளை எதிர்பார்க்க முடியாது. அவர்கள் நியாயமான வசதிகளுடன் இருக்கிறூர்கள்; என்றுலும் அவர்கள் தங்கும் அறைகள் நெருக்கமாகவும் சதுப்பாகவும் இருக்கின்றன என்று டாக்டர் பெரேரா கூறினூர்.

அவர் உள்ளே செல்வதற்கு அளிக்கப்பட்ட சலுகைக்கு கைதிகளுடன் பேசக் கூடாது என்பது ஒரு நிபந்தனையாக இருந்தது.

## மீன்பிடிகூட்டுத்தாபன புதிய தலைவர்

### திரு கே.எம்.பி. இராஜரத்தின நியமனம்

கொழும்பு, வெள்ளி மீன்பிடி கூட்டுத்தாபன தலைவராக திரு. கே எம். பி. இராஜரத்தின நியமிக்கப்பட்டிருக்கிறூர். திரு. சாம் சில்வாவின் இடத்திற்கு இவர் நியமனம் பெற்றுள்ளார்.

திரு. சில்வாவுக்குப் புதிய பதவி வழங்கப்படும் வரை திறைசேரியில் கடமையாற்றக் கூடும் என்று தெரிகின்றது.

திரு. சில்வாவின் நிர்வாக நடவடிக்கைகள் சமீபகாலத்தில் கடுமையான ஆட்சேபனைக்குள்ளாகியிருந்தன. அவர் மீன்பிடி கூட்டுத்தாபனச் செலவினங்களைக் கையாண்ட முறைகளையும் உலகவங்கி நிபுணர்கள்குழுவொன்று சமீபத்தில் கண்டித்திருந்தது.

## மரண அறிவித்தல்

மாவிட்டபுரம் பிரம்மஸ்ரீ பி. ஐயாசாமிக் குருக்கள் அவர்களின் அருமை சகோதரரும் கீரிமலை காசிவிசுவநாத சுவாமி கோவில் முன்னைய பூசகருமான சித்தாந்தக் குருக்கள் மாவிட்டபுரத்தில் நேற்றுப் பிற்பகல் சிவபதமடைந்தார். இன்று நண்பகல் அவருடைய அந்திமக் கிரியைகள் நடைபெறும். 255

## ரயில் விபத்து

கௌஹாட்டி, ஏப். 21 கௌஹாட்டிக்கருகே, வடகிழக்கு எல்லைரயில்வேயைச் சேர்ந்த பிரயாணிகள் ரயிலொன்று நேற்று இரவு லும்டிங் ரயில்நிலையத்தில் விபத்துக்குள்ளானதில் இறந்தவர்களின் தொகை 55 ஆக அதிகரித்துள்ளது.

இந்த ரயில்விபத்து குறித்து இப்பொழுது விசாரணைகள் நடைபெறறு வருகின்றன.

### இந்திரா அனுதாபம்

ரயில் விபத்து குறித்து தாம் அதிர்ச்சியடைந்ததாகவும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமது அனுதாபத்தைத் தெரிவிப்பதாகவும் பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஒரு செய்தி விடுத்துள்ளார்.

சுவான் ரோச் பற்றறிகள்

சீனுவிலிருந்து எமது ஸ்தாபனத்தால் தருவிக்கப்பட்ட "சுவான் ரோச் லைட் பற்றறிகள்" எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்

ரதி வாச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்
44, 46, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.
போன்: 7103

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org